1. செங்கீரைப் பருவம் விளக்குக.

செங்கீரைச்செடி காற்றில் ஆடுவது போன்று மென்மையாக குழந்தையின் தலை 5, 6 ஆம் மாதங்களில் அசையும். இப்பருவத்தைச் செங்கீரைப் பருவம் என்பர். இப்பருவத்தில் குழந்தை தன் இருகை ஊன்றி, ஒருகாலினை மடக்கி, மற்றொரு காலை நீட்டி தலைநிமிர்ந்தும் முகமசைந்தும் ஆடும்.

2. முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழில் கூறப்படும் அணிகலன்கள் யாவை?
   - சிலம்பு, கிண்கிணி - காலில் அணிவது
   - அரைஞாண் - இடையில் அணிவது
   - சுட்டி - நெற்றியில் அணிவது
   - குண்டலம், குழை - காதில் அணிவது
   - சூழி - தலையில் அணிவது.

3. ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் விளக்குக.
   - ஆண்பாற் பிள்ளைத்தமிழ் (கடைசி மூன்று பருவம் சிறுபறை, சிறுதேர், சிற்றில்)
   - பெண்பாற் பிள்ளைத்தமிழ் (கடைசி மூன்று பருவம் கழங்கு அம்மானை, ஊசல்)
   - இருபாலருக்கும் பொதுவான பருவங்கள் - காப்பு செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி.

4. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தைக் குமரகுருபரர் எவ்வாறு விளக்குகிறார்?
   - திருவடியில் அணிந்த சிறு செம்பொன்னால் ஆன கிண்கிணிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடட்டும்.
   - இடையில் அரைஞாண் மணியோடு ஒளிவீசுகின்ற அரைவடங்கள் ஆடட்டும்.

- பசும்பொன் என ஒளிரும் தொந்தியுடன் சிறுவயிறு சரிந்தாடட்டும்.
- பட்டம் கட்டிய நெற்றியில் விளங்குகின்ற பொட்டுடன் வட்டவடிவான சுட்டி பதிந்தாடட்டும்.
- கம்பிகளால் உருவான குண்டலங்களும் குழைகளும் காதில் அசைந்தாடட்டும்.
- உச்சிக் கொண்டையும் ஒளியுள்ள முத்துகளோடு ஆடட்டும்.
- தொன்மையான வைத்தியநாதபுரியில் எழுந்தருளிய முருகனே! செங்கீரை ஆடி அருள்க!
- இவற்றுடன் அழகிய பவளம் போன்ற திருமேனியும் ஆட செங்கீரை ஆடுக என குமரகுருபரர் விளக்குகிறார்.

5. பிள்ளைத்தமிழ் குறிப்பு வரைக
   - 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று பிள்ளைத்தமிழ் இறைவனையோ தலைவரையோ, அரசனையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடுவர்.
   - பாட்டுடைத் தலைவரின் செயற்கரிய செயல்களை எடுத்தியம்புவது பிள்ளைத்தமிழ்.
   - பத்துப் பருவங்கள் அமைத்துப் பருவத்திற்குப் பத்துப்பாடல் என நூறு பாடல்களால் இது பாடப்பெறும்.
   - ஆண்பாற் பிள்ளைத்தமிழ் பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகையாகப் பாடப்பெறும்.
6. குமரகுருபரர் குறிப்பு வரைக.
   - குமரகுருபரரின் காலம் 17 ஆம் நூற்றாண்டு.
   - இவர் தமிழ் வடமொழி, இந்துஸ்தானி ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர்.
   - கந்தர் கலிவெண்பா, மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக்கலம்பகம், சகலகலாவல்லிமாலை, நீதிநெறி விளக்கம், திருவாரூர் மும்மணிக்கோவை முதலான நூல்களை இயற்றியுள்ளார்.